**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.451** **நாள்: 07.12.2023**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்நேரு அவர்கள் சோழிங்கநல்லூர், பெருங்குடி, அடையாறு மற்றும் மணலி மண்டலங்களில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகளை இன்று (07.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (07.12.2023) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்நேரு அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர், பெருங்குடி, அடையாறு மற்றும் மணலி ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள், பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு விநியோகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் சோழிங்கநல்லூர் மண்டலம், நூக்கம்பாளையம் லிங்க் சாலையில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு, தேங்கியுள்ள மழைநீரினை அகற்றும் பணியினைப் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வரப்பெற்ற உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு மக்களுக்கு வழங்கினார்.

பின்னர், ஒக்கியம்மடுகு கால்வாயில் மழைநீர் வடிந்து சீராக செல்வதற்கு ஏதுவாக அக்கால்வாயிலிருந்த ஆகாயத்தாமரைகள் மற்றும் குப்பை கழிவுகளை இயந்திரங்கள் மூலம் அகற்றும் பணியினைப் பார்வையிட்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினார். பின்னர் அப்பகுதி மக்களுக்காக வரப்பெற்ற உணவு மற்றும் நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு எவ்வித குறைபாடுமின்றி வழங்கிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருங்குடி மண்டலம், துரைப்பாக்கம், பல்லாவரம் 200 அடி ரேடியல் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ச்சியாக, மடிப்பாக்கம் குபேரன் நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பால், ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

தொடர்ந்து, அடையாறு மண்டலம், வேளச்சேரி, விஜயநகர் பேருந்து நிலையம் பகுதியில் தேங்கியுள்ள மழைநீர் அகற்றும் பணியினைப் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திடவும், இப்பகுதி மக்களுக்கு சீரான மின்விநியோகம் வழங்கிடவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்

பின்னர், மணலி மண்டலத்தில் எஸ்.ஆர்.எஸ். லிமிடெட் நிறுவனத்தில் மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிகளுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள உணவு தயாரிக்கும் கூடத்தினையும், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் எவ்வித குறைபாடுமின்றி வழங்கிடவும், நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, ஆமுல்லைவாயில் பாலம் அருகில், புழல் ஏரியின் உபரிநீர் வெளியேறும் பகுதியினையும், அதன் வரைபடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மக்களின் வாழ்விடங்களில் இயல்பு நிலை திரும்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், மாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அரிசி, ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அரவிந்த் ரமேஷ், திரு.எஸ்.சுதர்சனம், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர்/மிக்ஜாம் புயல் மீட்புப் பணி சிறப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருவீரராகவ ராவ், இ.ஆ.ப., திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., திரு.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.எஸ்.வி.ரவிச்சந்திரன், திரு.வி.இ.மதியழகன், திரு.ஏ.வி.ஆறுமுகம் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**